**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி**
**முன்னிலை:திரு.N.விஸ்வநாத், B.A.,B.L.,M.B.A.,L.L.M.**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கடலாடி.**

**2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28 ம் நாள் புதன்கிழமை**

**I.A.No.01/2024**
**in**
**O.S.No.152/2019**

1. நீலமேகம் (இறப்பு)
2. முத்துனாட்சி
3. கிருஷ்ணமூர்த்தி
4. இராமகிருஷ்ணன்
5. கிருஷ்ணவேணி
6. காயாம்பு

...மனுதாரர்கள்/உத்தேச 2 முதல் 6 வாதிகள்

/எதிர்/

காளீஸ்வரி வகையறா ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 14.02.2024 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/2 முதல் 6 வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.அரிச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கில் கடந்த 15.10.2023 ம் தேதி காலமான மனுதாரரின் கணவர் நீலமேகத்திற்கு வாரிசுகளாக உத்தேச 2 முதல் 6 வாதிகளாக சேர்த்து உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்கள்/2 முதல் 6 வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

அசல் வழக்கில் வாதி கடந்த 15.10.2023 ம் தேதி இறந்துவிட்டதால்

மனுதாரர்களை உத்தேச 2 முதல் 6 வாதிகளை வாரிசுகளாக சேர்த்து வழக்கினை மேல்நடத்த உத்தரவிடக்கோரி மனுதாரரால் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் மனுவினை செலவுத்தொகையுடன் அனுமதிக்கக்கோரி மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

அசல் வழக்கில் வாதி கடந்த 15.10.2023 ல் இறந்து விட்டார். அவருக்கு 2 முதல் 6 உத்தேச மனுதாரர்களை வாரிசுதாரர்கள் என்றும் மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிக்கக்கோரி மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

இறந்துபோன வாதியின் வாரிசுதாரர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து வழக்கினை மேற்கொண்டு நடத்திட வேண்டியது அவசியமானதாக உள்ளது. எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 28.02.2024 இன்று அவையறிய பகரப்பட்டது.

N VISWANATH

Digitally signed by N VISWANATH
Date: 2024.02.28 15:10:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

**<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:**

**இல்லை.**

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:**

**இல்லை.**

N VISWANATH

Digitally signed by N VISWANATH
Date: 2024.02.28 15:10:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

I.A.No.01/2024
in
O.S.No.152/2019

Date:28.02.2024
IA order